உ

சிவ சிவ

# விநாயகர் அகவலும்

# மூவர் அம்மானையும்

[ குறிப்புரையுடன் ]

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து
விநாயக சதுர்த்தி
இலவச வெளியீடு

12—9—1953

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

# திருப்பனந்தாள்

## ஸ்ரீ காசிமடத்து வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... ... ... | 0 | 1 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு — டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... ... ... | 6 | 0 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... ... | 3 | 0 |
| 4 | திருஞான சம்பந்தர் தேவாரம் ... ... | 2 | 8 |
| 5 | திருநாவுக்கரசர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 6 | சுந்தரர் தேவாரம் ... ... ... | 1 | 0 |
| 7 | திருவாசகம் ... ... ... | 0 | 6 |
| 8 | திருக்கோவையார் — பேராசிரியர் உரை ... | 2 | 0 |
| 9 | ஒன்பதாம் திருமுறை — திருவிசைப்பா. திருப்பல்லாண்டு ... ... | 9 | 0 |
| 10 | திருமந்திரம் ... ... ... | 1 | 8 |
| 11 | பதினோராந் திருமுறை ... ... ... | 1 | 4 |
| 12 | அம்மையார் — அற்புதத் திருவந்தாதி ... ... | 0 | 4 |
| 13 | திருக்கைலாய ஞானவுலா ... ... | 0 | 8 |
| 14 | பெரிய புராணம் ... ... ... | 2 | 8 |
| 15 | அகத்தியர் தேவாரத்திரட்டு குறிப்புரை ... | 0 | 6 |
| 16 | திருவிளையாடற் புராணம் ,, ... ... | 3 | 0 |
| 17 | தாயுமானசுவாமிகள் பாடல் ,, ... ... | 1 | 4 |
| 18 | கந்தபுராணச் சுருக்கம் ,, ... ... | 1 | 12 |
| 19 | கந்தபுராணம் — முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 2 | 12 |
| 20 | ஷை யுத்தகாண்டம், தேவகாண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 1 | 12 |
| 21 | ஷை தக்ஷகாண்டம் - குறிப்புரை — ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... ... | 1 | 8 |
| 22 | கந்தபுராண வசனம் ... ... | (அச்சில்) | |
| 23 | கந்தர் அலங்காரம் குறிப்புரை ... ... | 0 | 4 |
| 24 | கந்தர் அநுபூதி ஷை ... ... | 0 | 2 |
| 25 | கந்தர் கலிவெண்பா — ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... ... | 0 | 6 |
| 26 | கந்தர் கலிவெண்பா — மூலம் மட்டும் ... | 0 | 1 |
| 27 | கந்தர் கலிவெண்பா — தி. பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன் கூடியது ... | (அச்சில்) | |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை

# விநாயகர் அகவலும்

# மூவர் அம்மானையும்

[ குறிப்புரையுடன் ]

*

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**
அவர்கள் திருவுளக் கருத்தின்படி
வெளியிடப்பெற்றது

*

பதிப்பாசிரியர்
**வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L.,**
பிரின்சிபால், செந்தமிழ்க்கல்லூரி,
திருப்பனந்தாள்

உரிமைப் பதிவு ] 12—9—1953 [ விஜய, ஆவணி

உ

சிவ சிவ

—o—

## சிவ நாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் ;
சிவசிவ என்றிடத் தீவினை மாளும் :
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர் ;
சிவசிவ என்னச் சிவகதி தானே.

—திருமந்திரம்

# முகவுரை

அம்மையப்ப னுய்உயிருக் காதார மாய்நிறைந்த
செம்மைசிவன் தாள்என் சிரம். —**சித்தாந்த தரிசனம்**

“**மூவர் அம்மானை**” என்ற இத்தொகுப்பு நூல் சிவன், உமை, திருமால், விநாயகர், முருகன் என்ற இவ்வைவர் மீதும் பாடப் பெற்ற பாக்களைக் கொண்டுள்ள ஒரு சிறு நூலாகும். இதனுள் பெரும்பாலும் சிவன், உமை, திருமால் இம் மூவரின் திருவிளையாடல்களைப்பற்றிக் கூறப் பெறுதலின் இது மூவர் அம்மானை என்ற பெயரினைப் பெற்றது போலும். **அம்மானை** என்பது மூன்று மங்கையர் அம்மானை என்ற விளையாட்டினை ஆடும்பொழுது, தலைவனது சிறப்பியல்புகளைச் சிலேடை முறையில் ஒருவருக்கொருவர் உரையாடும் வகையாக நான்கு அடிகளால் தனித்து வந்து ஈற்றடி எண்சீராய் மிக்கு, ஏனையடிகள் நாற்சீராய், இடைமடக்காய் வரும் கலித்தாழிசை என்ற ஒரு வகைப் பாவினால் பாடப் பெறுவதாகும்.

இந்நூல் ஒருவரால் பாடப்பெற்றதாக அறிதற்கில்லை. பல கலம்பகங்களில் உள்ள அம்மானைப் பாக்களை எடுத்துத் தொகுக்கப் பெற்றிருக்கலாம் என ஊகிக்க இடமிருக்கிறது. ஏனெனில் இந்நூலுள் இருக்கும் சில பாக்கள், அச்சிட்டு வெளிவந்துள்ள சில கலம்பகங்களில் காணப்பெறுகின்றன. இந்நூலைத் தொகுத்த ஆசிரியரைப்பற்றிய விவரம் அறிதற்கில்லை. இந்நூல் நூறு அம்மானைச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் உள்ள ஒவ்வொரு செய்யுட்களின் கருத்துக்களும் சிலேடைப் பொருளும் கற்போர் உள்ளங்களைக் கவர்ந்து பரவசப்படுத்தும் தன்மையன; இலக்கிய அறிவையும் கடவுள் பற்றையும் மக்கட்கு எளிதில் புகட்ட வல்லன. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இச்சிறுநூலும், இதன் முற்பகுதியில் அமைந்துள்ள ஔவையார் அருளிச்செய்த **விநாயகர் அகவலும்** மக்கட்குப் பெரும்பயன் அளிக்கும் பொருட்டு, **விநாயக சதுர்த்தி நினைவு மலராக,** விஜய ஆண்டு ஆவணித் திங்கள், விநாயக சதுர்த்தி யாகிய இந்நன்னாளில் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து இலவச வெளியீடாக** வெளிவருகின்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவர், **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள், இது வரை மக்கள் நலங்கருதி, சைவசமய வளர்ச்சிக்கும், ஏனைய பொது நலப்பணிகட்கும் வழங்கியருளிய பேரறக் கட்டளைகளை இந் நானில மக்கள் நன்கு உணர்வர். **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கள் இச்சிறு நூலையும் வெளியிட்டு இலவசமாக மக்கட்கு வழங்கியருள முன்வந்துள்ள பெருங் கருணைத் திறத்தினைத் தமிழ் மக்கள் என்றும் நன்றியுடன் போற்றுங் கடப்பாடுடைய வர் ஆவர்.

இச் சிறு நூல் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நூல் நிலையத்தின் வெளியீட்டையும், இதுவரை வெளிவந்துள்ள ஏனைய வெளியீடுகளையும் ஒப்பிட்டுச் செப்பஞ் செய்யப் பெற்ற தாகும். ஆங்காங்கே இன்றியமையாத பாடபேதங்களும் காட் டப்பெற்றுள்ளன. புதியதாகக் குறிப்புரை ஒன்றும் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது.

இந்நூலை ஒப்புநோக்கி வெளியிடுதற்கு உரிய உரிமைகளை L. Dis No. 999/53 Dated 23—8—53-ன்படி வழங்கி யருளிய சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நூல்நிலையப் பாது காவலர், உயர்திரு. T. **சந்திரசேகரன்** M. A., L. T. அவர்கட் கும், இந்நூலை அச்சிடுங்கால் ஒப்பு நோக்குதல் முதலிய பணி களை நன்முறையில் ஆற்றித்தந்த எமது நண்பர், திருச்சிராப் பள்ளி திரு. **வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்கட்கும் திரு. **வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கட்கும் எமது நன்றி என்றும் உரியதாகும்.

அடியவனை இச்சிறு பணியில் ஊக்கியருளிய, **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கட்கும், அவர்கள் அருள்வழி நின்றொழும், **ஸ்ரீமத் வித்வான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்** அவர்கட்கும் அடியவன் எழுமையும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.

திருப்பனந்தாள்,
12—9—53.

இங்ஙனம்,
**கே. எம். வேங்கடராமையா,** M.A., B.O.L.

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

## ஔவையார்

அருளிய

# விநாயகர் அகவல்

—oo—

### ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை[1] வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
பொற்புற விளங்கும் பொருளே! கயிலை
அற்புதன்[2] ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

---

1. பேழை - பெட்டி. 2. கயிலை அற்புதன் - சிவன்.

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை[1] களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலந் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து
தலமொரு நான்கு[2]ந் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்றுமண் டல[3]த்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை[4]
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன்[5] குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம்[6] புலப்பட எனக்குத்

---

**1. கொடுவினை - தீவினை. 2. தலம் ஒரு நான்கு - சாலோகம், சாமீபம், சாருபம், சாயுச்சியம் என்ற நான்கு பதவி. 3. மூன்று மண்டலம் - சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்கள். 4. அசபை - ஒரு மந்திரம். 5. குமுத சகாயன் - சந்திரன். 6. புரியட்டகாயம் - சூக்கும சரீரம்.**

தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பா லுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே.

——oo——

## சித்திபுத்திகள்

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர்
தமக்குஅறிவுந் தொழிலு மான
அருளெனுமுண் மையைஎவரும் அறியஅவர்
உமையின்அவ தரித்த ஞான்றும்
ஒருமுனியோம் பியதழலின் அவதரித்த
ஞான்றுமுட னாகித் தோன்றித்
திருவுளத்தின் வழிநிற்கும் **சித்திபுத்தி**
எனுமிவர்தாள் சென்னி சேர்ப்பாம்.

**—விநாயக புராணம்**

——oo——

உ

சிவ சிவ

# விநாயகர் வழிபாட்டின் பயன்

—oo—

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— **கபிலதேவர்**

பாசத் தளையறுத்துப் பாவக்கடல் கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே; — மாசற்ற
காரார் வரைஈன்ற கன்னிப் பிடிஅளித்த
ஓராளை வந்(து)என் உளத்து.

— **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்**

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# மூவர் அம்மானை

## காப்பு*

வேக மானெறி[1] சேரும் வினைகளும்
தாக சோகம்[2] விடாத தளர்ச்சியும்
சோக வாரியி னுல்வருந் துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்.

——oo——

## நூல்

### இடைமடக்காய் ஈற்றடிமிக்கு வந்த கலித்தாழிசை

புந்திவனஞ் சூழும் பொருவில்லாப் **பிள்ளையார்**
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி அம்மானை ;
தந்திமுகன் குடவயிற்றன் சப்பாணி ஆமாகில்
இந்த வயிற்றுக்கு இரைஎங்கே அம்மானை ;
இன்றென்றே ஈசன் இரக்கலுற்றான் அம்மானை. 1

---

காப்பு : மால்நெறி - மாயாவாத மார்க்கம்; தாகம் - ஆசை; சோக வாரி - துன்பக்கடல்; போக - நீங்க.

1. சப்பாணி - நடக்கக்கூடாதவன். ஈசன் இரக்கலுற்றது - இது பரமசிவன் தாருகவனத்து இருடியர் பத்தினிமாரிடம் சென்று இரந்ததைக் குறித்தது.

* இக்காப்புச் செய்யுள் சிவராத்திரி புராணச் சுருக்கம் என்னும் நூலின்கண்ணும் காணப்படுகின்றது.

பாட பேதம்—1. வேகமாய்நெறி. 2. போகம்.

தெள்ளு தமிழ்பெருகும் **திருமுட்டத்து எம்பெருமான்**
உள்ள நிலமெல்லா முழுதுண்டார் அம்மானை ;
உள்ள நிலமெல்லா முழுதுண்டார் ஆமாகில்
கள்ளன் இவனென்று கட்டுவதென் அம்மானை ;
கட்டாரோ போரில் கதிரொளித்தால் அம்மானை. 2

**திருச்சிரமா புரவீசன்** செட்டிமகட் காய்வேடம்
தரித்து மருத்துவத்தின் **தாயானார்** அம்மானை ;
தரித்து மருத்துவத்தின் தாயானார் ஆமாகில்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கு ஏது அம்மானை ;
**மட்டுவார் குழல்**இருக்க மணம்அரிதோ அம்மானை. 3

சந்ததமும் பூபோற்றுஞ் **சைவசோ ணாசலனார்**
கந்தனது மாமிதன்னைக் கைப்பிடித்தார் அம்மானை ;
கந்தனது மாமிதன்னைக் கைப்பிடித்தார் ஆமாகில்
இந்தவுல கத்தினிற்கு ஏற்குமோ அம்மானை ;
ஏற்குமென்றே கையில்மழு ஏந்தினர்காண் அம்மானை. 4

விரிந்தபுகழ்[1] புள்ளிருக்கும் வேளூர் **வயித்தியனார்**
பரிந்துவினைதீர்க் குந்தெய்வப் பண்டிதர்காண் அம்மானை ;
பரிந்துவினைதீர்க் குந்தெய்வப் பண்டிதரே ஆமாகில்
மருந்துவிலை[2] கைக்கூலி வாங்குவரோ அம்மானை ;
வாயிலே[3] மண்போட்டு வாங்குவர்காண் அம்மானை. 5

---

2. திருமுட்டம் - ஸ்ரீமுஷ்ணம் என்னும் வைணவத்தலம். போரில் கதிர் ஒளித்தல் - கண்ணன் பாரதப் போரில் அருச்சுனனுக்காகச் சக்கரத்தை விட்டுச் சூரியனை மறைத்த வரலாறு.

3. முதலிரண்டடிகளில், பரமசிவன் திரிசிரபுரத்தில் செட்டிப் பெண்ணுக்குத் தாயாகி வந்த வரலாறு குறிக்கப் பெற்றது; 'பெண்ணாகிய பெருமான்'என்பது சம்பந்தர் தேவாரம். மட்டுவார்குழலி-மணம் நிறைந்த நீண்ட கூந்தலை யுடையவள்; இது திரிசிரபுரத்து அம்மையின் பெயர்.

4. சோணாசலனார் - திருவண்ணாமலையில் எழுந்தருளிய இறைவன்; கந்தனதுமாமி - வள்ளியின் தாய்; மான்.

5. புள்ளிருக்கும் வேளூர் - வைத்தீசுவரன் கோயில் என்னும் தலம். இத்தலத்து ஆலயத்துள் இருக்கும் மண்ணை நோயாளிகள் உண்டு நோய் நீங்கப்பெறுவர் என்பது வழக்கு.

பாடபேதம் —1. இருந்தபுகழ். 2. மருந்துவினை. 3. வாயில்.

புள்ளிருக்கும் வேளூர்ப் புண்ணியனார் பெற்றமுத்துப்
**பிள்ளை**தனக்கு இந்திரனார் பெண்கொடுத்தார் அம்மானை ;
பிள்ளை தனக்கு இந்திரனார் பெண்கொடுத்தார் ஆமாகில்
வள்ளிதனைக் கொள்ள வழக்குண்டோ அம்மானை ;
வள்ளியம்மை அம்மான் மகளல்லோ அம்மானை. 6

மருப்பாரும் பூஞ்சோலை மலைவாழ் **அரங்கேசர்**
திருப்பாற் கடலுடைய செல்வர்காண் அம்மானை ;
திருப்பாற் கடலுடைய செல்வரே ஆமாகில்
இரப்பாற்குப்[1] பெண்கொடுப்பது ஏச்சலவோ அம்மானை ;
என்றலவோ மண்ணையுண்டு இருந்தனர்காண் அம்மானை. 7

ஈசன் பசுவாகி ஏமன் இளங் கன்றாகி
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை ;
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் ஆமாகில்
காசளவு பாற்றான் கறக்குமோ அம்மானை ;
கன்றை உதைகாலி கறவாதே அம்மானை. 8

எண்ணரிய கச்சியில்வாழ் **ஏகாம் பரநாதர்**
அண்ணலெழில் மேனியெல்லா மாகாயம் அம்மானை
அண்ணலெழில் மேனியெல்லா மாகாயம் ஆமாகில்
தண்ணிலா வெண்முடிமேல் சடையானார் அம்மானை ;
சடையானார் பேர்முடித்தது அலை[2]யாமோ அம்மானை. 9

ஆரார் [3] வயல்சூழ் அருணை **யண்ணா மலைநாதர்**
பேரரிய வண்ணாரைப் பெண்கொண்டார் அம்மானை ;

---

6. முத்துப்பிள்ளை - முத்துக்குமாரசாமி. இந்திரன்பெண் - தெய்வயானை. அம்மான்மகள் - மாமன் (திருமால்) மகள்; அழகிய மானின் மகள்.

7. மருப்பு ஆரும் - மரங்கள் நிறைந்த; சோலைமலை - திருமாலிருஞ்சோலை (அழகர்மலை) என்னும் தலம். இரப்பான் - பிச்சையெடுப்பவன்; சிவபெருமான். ஏச்சு - இகழ்ச்சி.

8. முதலிரண்டடிகள் மநுநீதி சோழன் வரலாற்றைக் குறிக்கும். ஏமன் - இயமன். கன்றைஉதைகாலி - மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்த சிவன்.

9. எண்ணரிய - அளவிடுதற்கரிய, புகழ் நிறைந்த. கச்சி - காஞ்சிபுரம். அலை - கங்கை.

பாட பேதம்—1. ஏற்பாற்குப். 2. முடித்தலை. 3. ஆரூர்.

பேரரிய வண்ணாரப் பெண்கொண்டார் ஆமாகில்
தாரணியில் யாவர்க்கும் தப்புவரோ அம்மானை ;
தப்புந்[1] துறையறிந்து தப்புவர்காண் அம்மானை. 10

அடுத்ததிருக் காவேரி அணியரங்கத்து எம்பெருமான்[2]
எடுத்த படுக்கையைவிட்டு எழுந்திலர்காண் அம்மானை ;
எடுத்த படுக்கையைவிட்டு எழுந்திலரே ஆமாகில்
படுக்கையிலே விடந்தீண்டப் பட்டாரோ அம்மானை ;
பட்டலவோ அவருடலைப் பருந்**தெடுத்தது**[3] **அம்மானை.** 11

பூங்கா வனஞ்சூழும் புள்ளிருக்கும் வேளூரார்
பாங்கான தென்மதுரைப் பாணன்காண் அம்மானை ;
பாங்கான தென்மதுரைப் பாணனே ஆமாகில்
தாங்காது இழையெடுத்துத் தைப்பாரோ[4] அம்மானை ;
தையலுக்கு நல்ல சமர்த்தன்காண் அம்மானை. 12

கள்ளிருக்கும் பூஞ்சோலை காளத்தி ஈச்சுரனார்
வெள்ளரியும்[5] கைக்கரியும் விரைந்துநட்டார் அம்மானை ;
வெள்ளரியும் கைக்கரியும் விரைந்துநட்டார் ஆமாகில்
புள்ளரியும் அங்கேபுடல் இட்டாரோ அம்மானை ;
புடலிட்டுப்[6] பூசிணியும் பூத்ததுகாண் அம்மானை. 13

சூட்டுபுகழ் தென்மதுரைத் தொல்லுலகில் **சொக்கேசர்**
காட்டுக்குள் வீற்றிருந்த காரணர்காண் அம்மானை ;

---

*10.* **வண்ணாரப் பெண் - வள் + நாரம் + பெண் - வளம்பொருந்திய கங்கைப்பெண். தப்புவரோ - அன்பர்கட்கு வரங்கொடுத்தலில் தவறுவரோ (தவறார்). தப்புந் துறையறிந்து தப்புவர் - மறைக்கும் நிலையறிந்து மறைந்து ஒழுகுவர்.**

*11.* **அரங்கம் - ஸ்ரீரங்கம். படுக்கையிலே விடந்தீண்டப்பட்டார் - ஆதிசேடனால் தாங்கப்பட்டார். பருந்து - கருடன்.**

*12.* **பாணன் - தையற்காரன். தென்மதுரைப்பாணன் - மதுரையில் பாணபத்திரனுக்காகச் சோமசுந்தரக் கடவுள் விறகுவிற்ற திருவிளையாடலைக் குறிக்கும். தையல் - தையல்நாயகி; புள்ளிருக்கு வேளூர் இறைவியின் பெயர்.**

*13.* **வெள்ளரி - வெண்மையான சிங்கம், கைக்கரி - யானை. சிவபெருமான் நரசிங்கத்தின் தோலையும், யானைத் தோலையும் விரும்பிப் போர்த்துக்கொண்டார் என்பது புராண வரலாறு.**

**பா - ம் 1. தப்புற. 2. எம்பெருமாள். 3. பருந்தெடுத்தார். 4. தப்பாரோ. 5. வெள்ளிரியும். 6. புடலிட்ட.**

காட்டுக்குள் வீற்றிருந்த காரணரே ஆமாகில்
இருட்டுப் பயஞ்சற்றும் இல்லையோ அம்மானை ;
எட்டானை சூழ்ந்திருந்தால் என்னபயம் அம்மானை. 14

கள்ளவிழுஞ் செஞ்சடையார் காளத்தி ஈச்சுரனார்
வள்ளலார் செஞ்சடைமேல் வாளரவுண்டு அம்மானை ;
வள்ளலார் செஞ்சடைமேல் வாளரவுண்டு ஆமாகில்
துள்ளிவரும் புலியைத் தொடருமோ அம்மானை ;
தொடருமோ மயிலாடுந் துறைகண்டால் அம்மானை. 15

சோற்றால்[1] மடையடைக்கும் சொக்கர்திருக் கூடலிலே
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினர்காண் அம்மானை ;
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினரே ஆமாகில்
மாற்றான் அடிக்க வழக்குண்டோ அம்மானை ;
வைகையிலே தானடிக்க வழக்குண்டோ அம்மானை. 16

ஆறுமுகம் ஆறாறாய் ஆகமெல்லாம் வேறாறாய்
வீறுடைய சண்முகனார் வேதாந்தி அம்மானை ;
வீறுடைய சண்முகனார் வேதாந்தி ஆமாகில்
மாறுடைய வேடவள்ளி மருவதென்ன அம்மானை ;
மருவதென்றே[2] சிவமலையில் மருவினார் அம்மானை. 17

மாலறியாக் கள்ளனிவன் வந்துமன்றி லேபுகுந்து
கோலமுடன் ஆடெடுத்துக் கொண்டொளித்தார் அம்மானை;

---

14. காடு - கடம்பவனம். எட்டானை - திக்குயானைகள்; இவை சோமசுந்தரக் கடவுள் வீற்றிருக்கும் இந்திர விமானத்தைத் தாங்குவன.

15. துள்ளிவரும் புலி - விரும்பிவரும் வியாக்கிரபாத முனிவர். மயிலாடுந்துறை - மாயூரம்.

16. திருக்கூடல் - மதுரை, வேறு+ஆள் - வேற்றாள். மாற்றான் - இங்குப் பாண்டியன். வைகையிலே - திட்டும்பொழுது; வைகை நதியிலே. இங்கு இறைவன் பிட்டுக்கு மண்சுமந்து, பாண்டியனால் பிரம்படிபட்ட வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.

17. ஆறுமுகம் - ஆறுமுகங்கள். ஆறாறு - முப்பத்தாறு தத்துவம். வீறு - பெருமை. மாறுடைய வேடவள்ளி - மாறுபட்ட வேடத்தில் வந்த வள்ளிநாயகி. சிவமலை - கொங்குநாட்டில் உள்ள ஒரு முருகன் தலம்.

18. மாலறியாக் கள்ளன் - திருமாலால் காணப்பெறாத சிவன். மன்று - சபை; சிதம்பரம். ஆடு - ஆட்டம். காறலைகடோலெலும்பு -

பா - ம் 1. சேற்றால். 2. மறுவென்றே.

கோலமுடன் ஆடெடுத்துக் கொண்டொளித்தார் ஆமாகில்;
காறலைக டோலெலும்பு கண்டதுண்டோ அம்மானை ;
கண்டலவோ இருகழுகு காத்திட்டது அம்மானை. 18

தெண்டிரைசூழ் தில்லைச் சிவகாமித் தாயார்க்குக்
கண்டமெல்லா ஞானக் கரும்புகாண் அம்மானை ;
கண்டமெல்லா ஞானக் கரும்புகாண் ஆமாகில்
அண்டர்பிரான் ஆலைதனை ஆடாரோ அம்மானை ;
ஆடிப் புலியூர் அமர்ந்தனர்காண் அம்மானை. 19

மங்கையுமை பாகர் வழுவூர் விடைநாதர்
திங்களுடன் கங்கை தினஞ்சுமந்தார் அம்மானை ;
திங்களுடன் கங்கை தினஞ்சுமந்தார் ஆமாகில்
அங்கமெல்லாங் குளிர்ச்சி ஆகாதோ அம்மானை ;
ஆமென்றே யானையுரித்து அணிந்தனர்காண் அம்மானை. 20

வற்றாத வைகையிலும் வாள்விசயன் தன்கையிலும்
பற்றுமல் அன்னரடி பட்டனர்காண் அம்மானை ;
பற்றுமல் அன்னரடி பட்டனரே ஆமாகில்
செற்றார் புரமெரித்த சேவகமேது அம்மானை ;
சேவகத்தைக் கேட்கச் சிரிப்பலவோ அம்மானை. 21

ஆதார மாங்குடந்தை யானகும்ப நாயகனார்
கோதாடு மன்மதனைக் கொண்டெரித்தார் அம்மானை ;

---

கால், தலைகள், தோல், எலும்பு. இருகழுகு - திருக்கழுக்குன்றத்தில் இறைவனைப் பூசிக்கும் இரு கழுகுகள்.

19. சிவகாமித்தாயார் - சிவகாமியம்மை. கண்டம் - கழுத்து. இங்குச் சொல்லைக் குறித்தது. புலியூர் - சிதம்பரம்.

20. வழுவூர் - ஒருதலம். விடைநாதர் - பரமசிவன்.

21. முதலிரண்டடிகள், இறைவன் பாண்டியனாலும் அருச்சுனனாலும் அடிபட்ட வரலாறுகளைக் குறிப்பிடுவன. செற்றார்புரம் - திரிபுரம். சேவகம் - வீரம்.

22. ஆதாரம் - உலகத்திற்கு ஆதாரம். குடந்தை - கும்பகோணம். கும்பநாயகனார் - கும்பேசுவரர். கோதாடு - குற்றம் பொருந்திய. மாதாபிதாக்கள் - மன்மதனின் தாய் தந்தையர், இலக்குமியும் திருமாலும். வாய்தனில் மண்விழுந்தது - திருமால் உலகமுண்டது.

கோதாடு மன்மதனைக் கொண்டெரித்தார் ஆமாகில்
மாதா பிதாக்கள்பழி வாங்குவரோ அம்மானை ;
வாங்குமுன்னே வாய்தனிலே மண் விழுந்தது அம்மானை. 22

தெற்குமுக மாயிருக்குந் தில்லைச்சிற் றம்பலவர்
நற்புவியே ழுக்குஉகந்த நாயகர்காண் அம்மானை ;
நற்புவியே ழுக்குஉகந்த நாயகரே ஆமாகில்
அற்பஇடைப் [1] பெண்ணை அணைவதென் அம்மானை ;
அணைந்தல்லோ [2] உருவ மானதுகாண் அம்மானை. 23

விரித்த சடைமுடியார் மேலைச் சிதம்பரனார்
வருத்தமுடன் தமக்கொருகால் வாதங்காண் அம்மானை ;
வருத்தமுடன் தமக்கொருகால் வாதமே ஆமாகில்
பெருத்தகடல் நஞ்சையுண்டு பிழைத்தாரோ அம்மானை ;
பிழைத்தலவோ நடமாடப் புறப்பட்டார் அம்மானை. 24

பாட்டைப் படித்துப் பயனறிய மாட்டாதார்
ஏட்டைப் படித்தோதி எய்தினர்காண் அம்மானை ;
ஏட்டைப் படித்தோதி எய்தினரே ஆமாகில்
பாட்டின் விதியின் பயனறியார் அம்மானை ;
பயனறியா வாசியன்றோ பட்டனர்காண் அம்மானை. 25

பெற்றபிள்ளை பேரறிந்து பேரிட்டு அழையாமல்
மற்றுமொரு பேரை வகுத்தழைத்தார் அம்மானை ;
மற்றுமொரு பேரை வகுத்தழைத்தார் ஆமாகில்
பெற்ற தகப்பனது பேரறியார் அம்மானை;
பேரறியா வாசியன்றோ போய்மாண்டார் [3] அம்மானை. 26

தெண்டிரைசூழ் தில்லைச் சிவகாம சுந்தரியாள்
மண்டலம்ஈர் ஏழுக்கு மாதாகாண் அம்மானை ;

---

23. தெற்குமுக......சிற்றம்பலவர் - சிதம்பரத்தில் தெற்குமுகம் நோக்கியாடும் நடராசப்பெருமான். அற்பவிடைப்பெண் - நுட்பமான இடையினையுடைய உமாதேவி; சிவகாமசுந்தரி.

24. மேலைச்சிதம்பரனார் - திருப்பேரூரில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமான். ஒருகால் வாதம் - ஒருகால் தூக்கப்பட்டது; தூக்கிய திருவடி.

25. பாட்டு - பொருள் நிறைந்த வேதாகமங்கள். வாசி - குற்றம்.

பா - ம் 1. அற்பவிடைப். 2. அணைந்ததல்லவோ. 3. பேயாண்டார்.

மண்டலம்ஈர் ஏழுக்கு மாதாவே ஆமாகில்
தண்டிகை ஏறச்சிலர்[1] கடாங்குவதென் அம்மானை ;
தாங்குவதும் ஏறுவதும் தருமந்தான் அம்மானை. 27

கல்லாலின் கீழிருக்கும் காளத்தி யார்தமக்கு
பொல்லாச் சிலந்தியொன்று பொருந்தினதே அம்மானை ;
பொல்லாச் சிலந்தியொன்று பொருந்தினதே ஆமாகில்
வல்லான் ஒருபணிக்கன் வந்ததுண்டோ அம்மானை ;
வந்ததுண்டு ஒருவேடன்[2] வரம்பெற்றான் அம்மானை. 28

கண்டவர்க்கு முத்தி கொடுக்கும் **கணபதிக்கு**
மண்டலத்தை உண்டதொரு மாமனுண்டோ அம்மானை ;
மண்டலத்தை உண்டதொரு மாமனுண்டே ஆமாகில்
கொண்டிருக்கப் பெண்ணைக் கொடுப்பாரோ அம்மானை ;
கொம்பனுக்குப் பெண்ணைக் **கொடுப்பாரோ அம்மானை**. 29

மாட்டில் பவனிவரு மதுரைக்கு நாயகனார்
காட்டில் விறகொடித்த காரணர்காண் அம்மானை ;
காட்டில் விறகொடித்த காரணரே[3] ஆமாகில்
கூட்டி அதைக்கட்டக் கொடியுண்டோ அம்மானை ;
கூடாதோ[4] பாகங் குடியிருந்தார் அம்மானை. 30

பாரில் புகழ்படைத்த பாரமலைச் சிலையான்
வாரி நஞ்சையுண்ட மத்தன்காண்[5] அம்மானை ;

---

27. தெள் + திரை - தெண்டிரை. மண்டலம் ஈர்ஏழு - மேல் ஏழு. கீழ் ஏழு புவனங்கள். தண்டிகை - பல்லக்கு. கடைசி இரண்டு அடிகள், "அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" என்ற திருக்குறள் கருத்தினை வலியுறுத்துகின்றன.

28. கல்லால்-கல்லால விருட்சம். சிலந்தி-சிலந்திப்பூச்சி, பணிக்கன்-விஷவைத்தியன். வேடன்-கண்ணப்பன். திருக்காளத்தியில், சிலந்தி, பாம்பு, யானை, கண்ணப்பர் முதலியோர் பூசித்துப் பேறுபெற்றனர் என்பது தல வரலாறு.

29. கண்டவர்க்கு - வழிபடும் அன்பர் அனைவருக்கும். கொம்பன் - தந்தத்தைக் கையிலேந்தியவன்.

30. மாடு - இடபம். பவனிவருதல் - உலாவருதல். காட்டில் விற கொடித்த வரலாறு திருவிளையாடற் புராணத்தில் விறகுவிற்ற படலத்துள் காண்க. கொடி - கொடிபோன்ற உமாதேவி.

பா-ம் 1. ஏறிச்சிலர். 2. வந்தன்றோ வேடன். 3. காரணர்காண். 4. கூட்டாதோ. 5. மதமத்தன்காண்.

வாரி நஞ்சையுண்ட மத்தனே [1] ஆமாகில்
கூரரிய நஞ்சுதான் கொல்லாதோ அம்மானை;
கொல்லுமோ மாற்றறிந்து **கொண்டக்கால் அம்மானை**. 31

திங்கடனை முடித்த **சிங்கபுரி** [2] **ஈச்சுரனுர்**
துங்கவேளைக் கரும்பைச் சுட்டனர்காண் அம்மானை ;
துங்கவேளைக் கரும்பைச் சுட்டனரே ஆமாகில்
அங்கமெல்லாம் நீலவண்ணம் ஆனதென்னே அம்மானை ;
ஆகாதோ ஆலம் அடர்ந்துநின்றால் அம்மானை. 32

*தேன்மருவுஞ்[3] சோலைத் **திருவரங்கத்து எம்பெருமான்**
ஆனவர்தான் ஆண்பெண் அலியினர்காண் அம்மானை ;
ஆனவர்தான் ஆண்பெண் அலியினரே ஆமாகில்
சானகியைக் கொள்ளுவரோ தாரமாய் அம்மானை
தாரமாய்க் கொண்டதுவும் சாபத்தால் அம்மானை. 33

திருக்கிளர் **விராலிமலைச் செவ்வேலர்** ஓதிவைத்த
குருக்கடலை தன்னிலே குட்டினர்காண் அம்மானை ;
குருக்கடலை தன்னிலே குட்டினரே ஆமாகில்
பெருக்க இவர்க்கும் பெருமையுண்டோ அம்மானை ;
பெருமையிலும் மேலான பெருமாள்காண் **அம்மானை**. 34

எடுத்தபுகழ் **அரங்கரவர்** ஏழுலகுந் தானறியப்
படுத்திருந்த நாகம் படமெடுத்தது அம்மானை ;
படுத்திருந்த நாகம் படமெடுத்தது ஆமாகில்
அடுத்துநின்ற கருடனைக்கண்டு அஞ்சாதோ அம்மானை;
அஞ்சுதலைக்கொண்டலவோ **அமர்ந்திருந்தது அம்மானை**. 35

---

**31.** **பாரமலை - பெரிய மேருமலை. சிலையான் - வில்லையுடைய சிவ பெருமான். வாரி - கடல். மத்தன் - உன்மத்தன். கூரரிய - மிக அரிய. மாற்று - மாற்றுப் பொருள்.**

**32.** **திங்கள்+தனை - திங்கடனை. சிங்கபுரி - சிங்கபுரம்; ஓரூர். துங்கம் - உயர்வு. வேள் - மன்மதன். கரும்பு - மன்மதனுடைய வில். ஆலம் - ஆலகால விடம்; கல்லால மரம்.**

**33.** **சானகி - சீதை. சாபம் - வில் (சிவதனுசு). தாரம் - மனைவி.**

**34.** **விராலிமலை - முருகன் தலங்களுள் ஒன்று. குருக்கள்+தலை - குருக்கடலை. குருக்கள் - பிரமன்.**

**35.** **நாகம் - ஆதிசேடன். அஞ்சுதலை - ஐந்துதலை; பயப்படுதலை.**

**பா - ம் 1. மதமத்தனே. 2. சிக்கபுரி. 3. தேனமருஞ்.**

*** இச்செய்யுள் திருவரங்கக் கலம்பகத்துள் காணப்படுகிறது.**

அற்றூர் புரம்[1] எரித்த ஆலங்காட்டு அப்பருக்கு
நெற்றிக்கண் ஒன்று நெருப்புக்காண் அம்மானை ;
நெற்றிக்கண் ஒன்று நெருப்புக்கண் ஆமாகில்
பற்றிச் சடையிற் படராதோ அம்மானை ;
படருமென்றே கங்கை பதிவிருந்தது [2] அம்மானை. 36

தேசத்துக்கு ஒப்பாகச் சிதம்பரத்துத் தெற்காக
வாசத்துக்கு ஏற்றதலம் **மாயூரம்**[3] அம்மானை ;
வாசத்துக்கு ஏற்றதலம் மாயூரம் ஆமாகில்
காசிக்குப் போனபலன் காணுமோ அம்மானை ;
காவேரிக் கரைகண்டால் காணுங்காண் அம்மானை. 37

பெருங்கையிலாயத்துறையும் பெருமையிலும் **செம்மையிலும்**[4]
முருங்கையிலே அத்தி முளைத்ததுகாண் அம்மானை ;
முருங்கையிலே அத்தி முளைத்ததுகாண் ஆமாகில்
பருங்காயாய்க் காய்த்துப் பறிப்பாரோ[5] அம்மானை ;
பறித்தலவோ **கொம்பொடித்துப்**[6] **பண்ணுகிறார் அம்மானை**. 38

கோணார் இளமுலையாள் கோதையிடப் பாகனார்
சேணுடர் போற்றுந்திரி பாகர்காண்[7] அம்மானை ;
சேணுடர் போற்றுந்திரி பாகரே ஆமாகில்
ஏணுதி மால்பிரமற்கு எட்டுவரோ அம்மானை ;
இடைமதிக்கும் குசைமதிக்கும் **எட்டுவரோ அம்மானை**. 39

நண்ணரிய பகைமையுடன் நட்பாற்றூர்[8] யாவருக்கும்
கண்ணிலும்வாயிலும்நெருப்புக் கையிலுமுண்**டே அம்மானை ;**

---

**36.** அற்றூர்புரம் - திரிபுரம். பதிவிருந்தது - தங்கியிருந்தது.

**37.** வாசம் - வசித்தல். காவேரிக்கரைகாணல் - காவிரித்துறையில் நீராடி எழுதல்.

**39.** கோணார் - சாயாத, கோதை - பார்வதி. சேணுடர் - தேவர்கள். திரிபாகர் - சிவபெருமான். ஏண் - பெருமை. மால் - திருமால். குசை - தருப்பை.

**40.** சீர்புனல் - கங்கை. நட்பாற்றூர் - பகைவர். மன்மதன், திரிபுரர். நட்டாறு - திருநள்ளாறு என்னும் தலம்.

பா - ம் - 1. அத்திபுரம். 2. பதிவிருந்தாள். 3. மாயபுரம். 4. பெருமையிலும் செம்மையிலும். 5. பறித்தல்லோ 6. கொம்படித்துப். 7. திரிபகர். 8. நண்ணிய சீர்புனலுடன்நட்டாற்றூர். நண்ணிய சீர்பூணலுடன் நட்டாற்றூர்.

கண்ணிலும்வா யிலும்நெருப்புக் கையிலுமுண்டே **ஆமாகில்**
எண்ணரிய திருமேனி எரிவுண்டோ அம்மானை ;
எரிந்தலவோ **நட்டாற்றில்** இருக்கின்றார் அம்மானை. 40

நாடுகரி சிறந்த**சம்பு நாதற்கு** இருப்பிடத்தில்
ஓடுஞ் சலம்பெருகி யூற்றெடுத்தது அம்மானை ;
ஓடுஞ் சலம்பெருகி யூற்றெடுத்தது ஆமாகில்
சாடுஞ் சிலந்தியொன்று தானுண்டே அம்மானை ;
தலத்தி லொருசிலந்தி தானுண்டே அம்மானை. 41

சுத்தன் புரட்டன்[1] சுவாமி வடிவேலன்
எத்தன் குலத்திற்கு இருளன்காண் அம்மானை ;
எத்தன் குலத்திற்கு இருளனே ஆமாகில்
மத்தன் கிழங்குகெல்ல வல்லவனோ அம்மானை ;
வள்ளிக் கொடிக்கு மயூரன்காண் [2] அம்மானை. 42

செல்வத்திலே பிறந்து திருக்கடையூ ரானைநம்பி
வில்வமெடுத்து ஏத்துதற்கு வினைவருமோ அம்மானை ;
வில்வமெடுத்து ஏத்துதற்கு வினைவருமே ஆமாகில்
வில்வவிருட் சமெல்லாம் வீண்போமே அம்மானை ;
வீண்போகா தேமனையே விழவுதைத்தார் அம்மானை. 43

வேத மெடுத்து விளம்புகின்ற [3] மெய்ப்பொருளின்
பாத மிருக்கும் பரிசறியார் அம்மானை ;

---

**41.** நாடுகரி - விரும்பிவரும் யானை, சம்புநாதர் - திருவானைக்கா இறைவன் பெயர். சாடும் - வருத்துகின்ற. சிலந்தி - நீர்ச்சிலந்தி. திருவானைக்காவின் சிலந்திப்பூச்சி, தன்வலையால் நிழல்பரப்பி இறைவனை வழிபட்டது என்பது தல வரலாறு.

**42.** சுத்தன் - இறைவன், புரட்டன் - மாறுபாடுடையவன். எத்தன் குலத்திற்கு இருளன் - வஞ்சக மனமுடையார்க்கு மறைந்து ஒழுகுபவன். இருளன் - இருண்டவன்; மலையில் வாழும் ஒரு சாதியான். மயூரன்-முருகன்.

**43.** திருக்கடையூரான் - திருக்கடையூரில் எழுந்தருளிய இறைவன்; அமிர்தகடேசுவரர். நம்பி - இங்கு மார்க்கண்டேயன். ஏத்துதல் - வழிபடுதல். ஏமனையே - இயமனையே.

**44.** மெய்ப்பொருள்-இறைவன். பரிசு-தன்மை. காதம் - ஒரு நீட்டல் அளவை.

பா-ம் 1. பாட்டன். 2. பூரணன்காண். 3. விளங்குகின்ற.

பாத மிருக்கும் பரிசறியார் ஆமாகில்
காத வழியோடிக் கலங்குவதேன் அம்மானை ;
கலங்காமல் எவ்வுயிருங் கண்டதுண்டோ அம்மானை. 44

ஆதி தனிலாதி அறிந்துரைக்க[1] மாட்டாதார்
சோதி யொளியதனைச் சொல்லுவரோ அம்மானை ;
சோதி யொளியதனைச் சொல்லுவரே ஆமாகில்
வாதி[2] தனக் குள்ளாகி வருந்துவதென் அம்மானை ;
வருந்தாரோ மாயை மயக்கத்தால் அம்மானை. 45

சிற்பரன்[3] தன்னைத் திருவாய்மெய்த் தேசிகனை
உற்ற பொருள்தன்னை உண்டறியார் அம்மானை ;
உற்ற பொருள்தன்னை உண்டறியார் ஆமாகில்
அற்றனிவன்[4] இடமாய் ஆடுவனே அம்மானை ;
ஆடானே தன்தொழிலால் ஆடுவன்காண் அம்மானை. 46

எட்டெழுத்தும் ஐந்தெழுத்தும் ஏகமெனும் ஓரெழுத்தும்
தொட்டெழுத்தைக் காட்டுந் துறையறியார் அம்மானை ;
தொட்டெழுத்தைக் காட்டுந் துறையறியார் ஆமாகில்
சுட்டசுடு காடிதென்று[5] சொல்லுவரோ அம்மானை ;
சொல்லுவார் குருவின்அருள் தொந்திப்பால் அம்மானை. 47

சாதிகுலம் ஒன்றாகத் தர்க்கமிடும் பேதையர்கள்
சாதிகுலம் இன்னதென்று தாமறியார் அம்மானை ;
சாதிகுலம் இன்னதென்று தாமறிவார் ஆமாகில்
ஆதியந்த நாதம் அறிவரோ அம்மானை ;
அறியாத வாசியதே ஆணவங்காண் அம்மானை. 48

---

**45.** ஆதிதனில் ஆதி - மூலப்பொருள். வாதி - வாசி - காற்று.

**46.** சிற்பரன்,-பரம் பொருள். தேசிகன்-குரு. உற்றபொருள் - சிவ பெருமான். இடமாய் ஆடுதல் - இடது திருவடியைத் தூக்கி ஆடுதல்.

**47.** எட்டெழுத்து - பீஜங்களோடு கூடிய பஞ்சாட்சரம். ஐந் தெழுத்து - ஸ்தூல பஞ்சாட்சரம். ஏகமெனும் ஓரெழுத்து - பிரணவம்; சிகாரமும் ஆகும். தொட்ட - பற்றிய. சுட்ட - பற்றறுத்த. தொந் திப்பு - தொடர்பு.

**48.** நாதம் - நாத தத்துவம். ஆணவம் - ஆணவமலம்.

பா-ம். 1. அறிந்திருக்க. 2. வாசி. 3. சித்தசன். 4. அத்தனிவன். 5. சுட்டசுடுகாடு சென்ற.

சாத்திரங்கள் கற்றுந் தனையறிய மாட்டாதார்
வேத்துறக்கம் வந்த விதம்அறியார் அம்மானை ;
வேத்துறக்கம் வந்த விதம்அறியார் ஆமாகில்
சூத்திரத்தில் சூட்சமுனை சொல்லுவரோ அம்மானை ;
சொல்வார் குருவினருள் தொந்திப்பால் அம்மானை. 49

குருவை அறியார் குருவின்அருள் தாமறியார்
திருவை அடுத்த[1] திறமறியார் அம்மானை ;
திருவை அடுத்த திறமறியார் ஆமாகில்
மருப்போது கொண்டுவந்த[2] வகையறியார் அம்மானை ;
வகையறியா வாசியன்றோ மாயைகாண் அம்மானை. 50

சந்திரனைச் சூரியனைத் தாமறிய மாட்டாதார்
அந்தரத்தைப் பார்த்துப்பார்த்து அலைவதென் அம்மானை;
அந்தரத்தைப் பார்த்துப்பார்த்து அலைவரே ஆமாகில்
சந்திரனோ டொன்றுஞ் சரியாகார் அம்மானை ;
சரியாவார் சகலகுணந் தாமெடுத்தார் அம்மானை. 51

வீடுகட்டி வீடெடுத்து வீடிழந்து போவார்கள்
பாடுபட்டுப் பெற்ற பதியறியார் அம்மானை ;
பாடுபட்டுப் பெற்ற பதியறியார் ஆமாகில்
கூடுவிட்டுப் பாயுங் குறிப்பறியார் அம்மானை ;
குறிப்பறியா மானிடர்கள் குருடர்காண் அம்மானை. 52

எல்லையற்ற தொன்றே இருக்குமிடம் அறியார்
கல்லையுரு வாக்குவித்துக் கைதொழுவார் அம்மானை ;
கல்லையுரு வாக்குவித்துக் கைதொழுவார் ஆமாகில்
சொல்லுக்கே இங்கிதமாய்ச் சொல்லுமோ அம்மானை ;
சொல்லாதோ தன்மனது சொல்லிடுங்காண் அம்மானை. 53

---

49. தனையறிதல் - தன்னை உணர்தல்; வேத்துறக்கம் - வேறுபட்ட மயக்கம்.

50. திரு - மேன்மை, தெய்வீகம், செல்வம். மரு - மணம்.

51. சந்திரன், சூரியன் - சந்திரகலை, சூரியகலைகள். அந்தரம் - வெளி. ஒன்றும் - பொருந்தும்.

52. வீடு - இங்குஉடல். பாடு - துன்பம். பதி - தலைவன். குருடர் - ஞானமற்றவர்.

53. எல்லையற்றதொன்று - பரம்பொருள். இங்கிதம் - எண்ணக் குறிப்பு.

பா - ம்—1. எடுத்த. 2. மதுப்பொதுகாண்டுவந்த.

பின்னாசை கொண்டு பிதற்றுகின்ற பேதையர்கள்
தன்னாசை நின்ற தலமறியார் அம்மானை ;
தன்னாசை நின்ற தலமறியார் ஆமாகில்
பன்னும் பொருளறிந்து பற்றுவரோ அம்மானை ;
பற்றுவார் அந்தப் பதியறிந்தார் அம்மானை. 54

தம்பட்ட மேளம் தவில்முரசும் எக்காளம்
தம்பித்த சத்தந் தனையறியார் அம்மானை ;
தம்பித்த சத்தந் தனை[1] யறியார் ஆமாகில்
கும்பிட்டு நின்று குழைவதென் அம்மானை ;
குழைவார் ஒருவனையே கூடவொண்ணார் அம்மானை. 55

அன்னைசுற்றம் பெண்டுபிள்ளை ஆசையெனும் இப்பொருளை
இன்னநிறம் இன்னகுணம் என்றறிவார்[2] அம்மானை
இன்னநிறம் இன்னகுணம் என்றறிவார் ஆமாகில்
தன்னுருவங் கண்டநிறஞ் சாற்றுவரோ அம்மானை ;
சாற்றுவார் சற்குருவைச் சார்ந்தக்கால் அம்மானை. 56

சித்திரத்தைப் போலுருவைச் சேர்த்தெடுத்து வைத்தாலும்
உத்திரத்திற்கு உத்திரம்[3] ஓங்குமோ அம்மானை ;
உத்திரத்திற்கு உத்திரம் ஓங்குமே ஆமாகில்
மற்றுமொரு ரூபம் வழங்குவதென் அம்மானை ;
வழங்குவரோ மாவடியில் வாழ்ந்திருந்தார் அம்மானை. 57

உச்சித மதியையும்[4] ஒழிந்தே பகலுலகில்
உச்சித மதியை உயரறியார் அம்மானை ;
உச்சித மதியை உயரறியார் ஆமாகில்
உச்சித மதியை உண்ணரோ அம்மானை ;
உண்ணரோ உட்பொருளை உண்டவர்காண் அம்மானை. 58

---

54. பின்னாசை - பின்னால் வரும் பிறவிக்குக்காரணமான ஆசை. தலம்- இடம்; எல்லை. பன்னும் - சொல்லப்படுகின்ற.

55. தவில் - ஒரு பறை. தம்பித்தல் - ஸ்தம்பித்தல்; நிறுத்தல். குழைதல் - நெகிழ்ச்சிகொள்ளுதல். ஒருவன் - ஒப்பற்றவன்.

56. அன்னை - தாய், பெண்டு - மனைவி.

57. உத்திரம் - விட்டம், மாவடி - மாமரத்தின்கீழ்

58. உச்சிதம் - உயர்வு. மதி - அறிவு, சந்திரன், அமிர்தம். உட்பொருள் - உள் நிறைந்த பொருள், பரம்பொருள்.

பா - ம் 1. தொம்பிட்ட சத்தந் தொனி. 2. என்றறியார். 3. உத்தரத்துக்கு உத்தரம். 4. உச்சி மதிரை.

நாமம் இடுவார் நடுவே நடுவிடுவார்
நாமம் இருக்கும் நடுவறியார் அம்மானை ;
நாமம் இருக்கும் நடுவறியார் ஆமாகில்
காமனையும் காலனையும் கட்டுவரோ அம்மானை ;
கட்டாரோ மேலிருத்திக் கண்டக்கால் அம்மானை. 59

மந்திரத்தைக் கற்று மதிமயங்கும் பேதையர்கள்
மந்திரத்தின் வித்து வகையறியார் அம்மானை ;
மந்திரத்தின் வித்து வகையறியார் ஆமாகில்
அந்தரத்தின் [1] உட்பொருளை அறிவாரோ அம்மானை ;
அறியாரோ தங்கள் அறிவினால் அம்மானை. 60

பெண்ணறிந்தும் ஆணறிந்தும் பேசும் பொருள்அறிந்தும்
கண்ணறிந்தும் வாழக் கணக்கறியார் அம்மானை ;
கண்ணறிந்தும் வாழக் கணக்கறியார் ஆமாகில்
பெண்ணிதென்றும் ஆணிதென்றும் பேசுவதென் அம்மானை;
பேசும் பொருளறிந்தால் பேசார்காண் அம்மானை. 61

எட்டெழுத் தேவீடாய் இசைந்த நடுவணையைப்
பட்டுருவிப் பார்க்கப் பரிசறியார் அம்மானை ;
பட்டுருவிப் பார்க்கப் பரிசறியார் ஆமாகில்
எட்டெழுத்தை ஈன்ற இயல்பறிவார் அம்மானை ;
இயல்பறியா வாசியன்றோ எய்துவது அம்மானை. 62

சித்தாந்தந் தன்னைத் தெளிய அறியாதார்
பெற்ற திருநாமம் பேசுவரோ அம்மானை ;
பெற்ற திருநாமம் பேசுவரே ஆமாகில்
வித்தான வித்தை விளம்புவரோ அம்மானை ;
விளம்புவார் மெய்ப்பொருளை மேவினால் அம்மானை. 63

ஐம்பத்தோர் அட்சரத்தை ஆராய்ந்து அறியாதார்
கம்பத் தொழில்தன்னைக் கண்டறியார் அம்மானை ;

---

**59.** நாமம் - பெயர், உருவம். காலன் - யமன்;
**60.** வித்து - பீஜாட்சரம்.
**61.** பெண், ஆண் - பெண், ஆண்களின் தன்மை. கணக்கு - வகை.
**62.** பட்டுருவிப்பார்த்தல் - ஊடுருவிப் பார்த்தல்.
**63.** வித்தான வித்து - மூலகாரணம்.

பா-ம் 1. அந்திரத்தின்.

கம்பத் தொழில்தன்னைக் கண்டறியார் ஆமாகில்
செம்பொற் பதத்தையிவர் சேருவரோ அம்மானை ;
சேருந் திருநாமம் செப்புவரோ அம்மானை. 64

ஆடும் பதியை அறிந்துரைக்க மாட்டாதார்
கூடும் பொருளறிந்து கூடுவரோ அம்மானை ;
கூடும் பொருளறிந்து கூடுவரே ஆமாகில்
வீடு அறிந்துகொண்டு விளம்புவரோ அம்மானை ;
விளம்பாத பேதையர்க்கு மெய்வருமோ அம்மானை. 65

சந்திரனைக் காணுதே தயங்குகின்ற பேதையர்கள்
அந்திபக லானதுவே ஆய்ந்தறிவார் அம்மானை ;
அந்திபக லானதுவே ஆய்ந்தறிவார் ஆமாகில்
மந்திரத்தைக் காணுதே மயங்குவதென் அம்மானை ;
மயங்குவது தான்சின்ன மாயையால் அம்மானை. 66

அருளறிந்து சேர்க்க அறியாத பேதையர்கள்
பொருளறிந்து சேர்க்கப் பொருந்துவரோ அம்மானை ;
பொருளறிந்து சேர்க்கப் பொருந்துவரே ஆமாகில்
இருளதனை யேநீக்கி இருப்பரோ [1] அம்மானை ;
இருப்பார் அனுதினமும் எங்கெங்கும் அம்மானை. 67

வாசிக் குள்ளாகி மயங்குகின்ற பேதையர்கள்
வாசிதனைக் கட்ட வகையறியார் அம்மானை ;
வாசிதனைக் கட்ட வகையறியார் ஆமாகில்
தேசிகனைக் கண்டு தெரிசியார் அம்மானை ;
தெரிசிப்பார் சித்தர் சிவபத்தர் அம்மானை. 68

தாயை அறியாதார் தகப்பனையுந் தாமறியார்
தாயிருந்த அத்தலமுந் தாமறியார் அம்மானை ;

---

64. ஐம்பத்தோர் அட்சரம்-அகரம் முதலிய வடமொழி எழுத்துக்கள்.

65. ஆடும்பதி - நடராஜப் பெருமான். மெய் - மெய்ஞ்ஞானம்.

66. மந்திரம் - மந்திரப்பொருளாள மெய்ப்பொருள்.

67. பொருள் - மெய்ப்பொருள். இருள் - அஞ்ஞானம்.

68. வாசி - மாறுபாடு, காற்று, மூச்சு. தேசிகன் - ஆசாரியன், குரு. சித்தர் - சித்துக் கைகூடப்பெற்றவர்.

69. தாய், தகப்பன் - இறைவி, இறைவன். தாயிருந்த தலம் - இறைவி ஒடுங்கியுள்ள இடம்; இறைவன். உருவானத்தை - உருவானதை. காமனை

பா - ம் - 1. இருடனையே நீக்கி இருப்பாரோ.

தாயிருந்த அத்தலமுந் தாமறிவார் ஆமாகில்
காயமுரு வானத்தைக் கண்டறிவார் அம்மானை ;
காமனையும் காலனையும் கணக்கறிவார் அம்மானை. 69

ஒடுக்கம் அறியார் உணர்வு நினைவறியார்
படுக்கையிலே நித்திரையைப் பார்த்துறங்கார் அம்மானை ,
படுக்கையிலே நித்திரையைப் பார்த்துறங்கார் ஆமாகில்
எடுத்துரைத்த சாத்திரங்கள் இறந்தனகாண் அம்மானை ;
இறந்து பிறப்பனவும் இருவினைகாண் அம்மானை. 70

தன்வீடும் தன்முதலும் தாமறிந்து வாழாமல்
பின்வீடும் பின்முதலும் பேணுவர்காண் அம்மானை ;
பின்வீடும் பின்முதலும் பேணுவரே ஆமாகில்
தன்வீடும் தன்முதலும் தாமறிந்தார் அம்மானை ;
தாமறிந்தால் வீடுகட்டத் தலமறியார் [1] அம்மானை. 71

தம்மனத்தையறியார் தவத்தின் நிலையறியார்
இம்மையிலே மோட்சகதி எய்துவரோ அம்மானை ;
இம்மையிலே மோட்சகதி எய்துவரே ஆமாகில்
தம்மனம் அறியாமல் தவிப்பதென் அம்மானை ;
தவிப்பதுவும் எழுபிறவித் தாகங்காண் அம்மானை. 72

உள்ளத்தி னுள்ளே ஒளித்திருக்கும் உத்தமனைக்
கள்ளத் திருக்கறுத்துக் காண்பாரோ அம்மானை ;
கள்ளத் திருக்கறுத்துக் காண்பாரே ஆமாகில்
தள்ளப்படா தென்றவினை [2] தள்ளுவரோ அம்மானை ;
தள்ளுவரோ தாமிருக்குந் தலமறியார் [2] அம்மானை. 73

---

-யும் காலனையும் கணக்கறிதல் - மோகத்தை முனிந்து யமன் வருகையைத் தவிர்தல்.

70. ஒடுக்கம் - ஒடுங்கியிருக்கும் தன்மை; இருவினை - நல்வினை, தீவினை காரணமாகவே.

71. தன் வீடு - மோட்சம் பெறுதற்குரிய வழிகள். தன்முதல் - இறைவன். பின் வீடு - பின்னும் எடுக்கும் பிறவி. பின்முதல் - அப்பிறவிக்கு வித்தாகிய வினை. பேணுதல் - விரும்பிப் பாதுகாத்தல்.

72. மனத்தை அறிதல் - மனத்தின் நிலை அறிதல். எழுபிறவித்தாகம் - ஏழாக வருகின்ற பிறவிகளின் வருத்தம்.

73. திருக்கு - வஞ்சகம். தள்ளப்படாவினை - நீங்கப்பெறாத ஊழ்வினை.

பா - ம் - 1. தவமறியார். 2. தென்றருவினை.

கடையறிந்து விற்கக் கணக்கறியா மூடர்கடாம்
எடையறிந்து வாணிபத்தை எய்துவரோ அம்மானை ;
எடையறிந்து வாணிபத்தை எய்துவரே ஆமாகில்
கடையறிந்து தாஞ்சரக்கைக் கட்டுவரோ அம்மானை ;
கட்டறியா வாசியன்றோ கலங்குவதும் அம்மானை. 74

தில்லையறியார் சிவபதத்தைத்[1] தாமறியார்
எல்லையிலாப் பேரொளியில் எய்துவரோ அம்மானை ;
எல்லையிலாப் பேரொளியில் எய்துவரே ஆமாகில்
கல்லையுரு வாக்குவித்துக் கைதொழுவார் அம்மானை ;
கைதொழுது நிற்பதுவுங் கற்பனைகாண் அம்மானை. 75

இறந்து பிறப்பவர்க்கு எத்தனைதான் சொன்னாலும்
மறந்தமிழ்ந்து போனவர்க்கு மதிவருமோ அம்மானை ;
மறந்தமிழ்ந்து போனவர்க்கு மதிவருமே ஆமாகில்
பிறந்துமதி இறந்ததுவும் [2] பிறப்பறியார் அம்மானை ;
பிறப்பறியார் குலம்பிரித்துப் பேசுவதென் அம்மானை. 76

* கலைமதியின் கீற்றணிந்த காசியகிலேசர்
சிலைமதனைக் கண்ணழலால் செற்றனர்காண் அம்மானை ;
சிலைமதனைக் கண்ணழலால் செற்றனரே ஆமாகில்
மலைமகட்குப் பாகம் வழங்குவதேன் அம்மானை ;
வழங்காரோ அப்பாலும் மாலானால் அம்மானை. 77

தன்னை அறியார் தலைவனையுந் தானறியார்
பின்னைக்குரு பீடமென்று பேசுவரோ அம்மானை ;

---

74. கணக்கு - சூழ்ச்சி. கட்டுதல் - அடக்குதல், புலனையடக்கல்.

75. தில்லை - சிதம்பரத் தலம்.

76. இறந்து பிறப்பவர் - உயிர்கள். அமிழ்ந்து போனவர் - பிறவிக் கடலில் அழுந்தியவர். மதி - உண்மை அறிவு. வருமேயாமாகில் - சிறிது வருமாகில். பிறப்பு - பிறவிக்குக் காரணம்.

77. கீற்று - துண்டம். அகிலேசர் - காசியம்பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் ; விசுவேசர். சிலை - கரும்புவில். அழல் - நெருப்பு. செற்றனர் - அழித்தனர். மலைமகள் - பார்வதி. பாகம் - இடப்பாகம். மால் - மயக்கம், திருமால். அப்பால் - அப்பகுதி, இறைவிக்கு அளித்த அவ்விடப்பாகம்.

பா-ம். 1. சிவதலத்தைத். 2. பிறந்தமதி இருந்ததுவும்.

* இச்செய்யுள் காசிக் கலம்பகத்து உள்ளதாகும்.

பின்னைக்குரு பீடமென்று பேசுவரே ஆமாகில்
தன்னையறி யாதகுரு சாதிகுரு அம்மானை ;
சாதிகுரு தர்க்கமிட்டுத் தாமலைவார் அம்மானை. 78

உள்ளும் புறம்பும் ஒருசமய மாயிருக்கக்
கள்ளரறு[1] சமயங் கண்டதுண்டோ அம்மானை ;
கள்ளரறு[1] சமயங் கண்டதுண்டே ஆமாகில்
கொள்ளுந் தொழிலைக் குலம்பிரித்தார் அம்மானை ;
பிறந்தகுலம் பிரித்துப் பேசுவரோ அம்மானை. 79

வீட்டு விளக்கை விளக்கி அறியாமல்
காட்டுவிளக் கொன்றைக் கைதொழுதார் அம்மானை ;
காட்டுவிளக் கொன்றைக் கைதொழுவார் ஆமாகில்
கூட்டு விளக்கைக் குறிப்பறியார் அம்மானை ;
குறிப்பறியா மானிடர்கள் குருடர்காண் அம்மானை. 80

* புண்ணியன்நம் வெங்கைப் புனிதன்அயன் மாலெதிரே
அண்ணலரும் பேரொளியாய் அன்றெழுந்தான் அம்மானை ;
அண்ணலரும் பேரொளியாய் அன்றெழுந்தான் ஆமாகில்
கண்ணில் அவரெளிதிற் காணாரோ அம்மானை ;
கண்ணின்றிக் காணுங் கதிரொளிகாண் அம்மானை. 81

நாட்டிலுள்ள கல்லையெல்லாம் நன்றாக வேதிரட்டிக்
கூட்டியுரு வாக்குவித்துங் குருவறியார் அம்மானை ;
கூட்டியுரு வாக்குவித்துங் குருவறியார் ஆமாகில்
ஏட்டிலுள்ள பாட்டையெல்லாம் எடுத்துரைத்தார் அம்மானை ;
எடுத்துரைத்தால்[2] பயன்அவற்றால் எய்துவரோ அம்மானை. 82

---

78. தன்னை அறிதல் - ஆத்மநாதன் இயல்பு அறிதல் ; தன்னைப்பற்றி அறிதல். சாதிகுரு - பிறப்பால் குருவாகி இருப்பவர். தர்க்கம் - விவாதம்.

79. கள்ளர் - வஞ்சகம், பொய். அறுசமயம் - அறுவகைப்பட்ட சமயங்கள்.

80. வீட்டுவிளக்கு - உள்ளத்து விளங்கும் சோதிமயமான இறைவன். கூட்டுவிளக்கு - கூடியிருக்கும் விளக்கு. குருடர் - அஞ்ஞானி.

81. வெங்கை - வெங்கைநகர். புனிதன் - தூய்மையானவன். அயன்மால் எதிரே பேரொளியாய் அன்றெழுந்தது - அடிமுடி தேடிய வரலாறு. கண்ணின்றிக் காணும் - அகக்கண்ணால் நோக்கும்.

82. குருவினால் காட்டப்பெற்ற வழியே நின்று தலைவனை அடைதல் வேண்டும் என்பது கருத்து.

பா - ம் 1. கள்ளலறு. 2. எடுத்துரைத்தார்.

* இச்செய்யுள் திருவெங்கைக கலம்பகத்துள் உள்ளது.

தன்னுருவில் நின்று தயங்குகின்ற சிவனைத்தான்
இன்னவுரு இன்னநிறம் என்றறியார் அம்மானை ;
இன்னவுரு இன்னநிறம் என்றறியார் ஆமாகில்
தன்னுருவில் பாய்ந்தவுயிர் தாமறியார் அம்மானை ;
தாமறியார் சித்தாந்தந் தானறியார் அம்மானை. 83

முக்காலுங் காகம் முழுகிக் குளித்தாலும்
கொக்காகி இக்குலத்தில் கூடுமோ அம்மானை ;
கொக்காகி இக்குலத்தில் கூடுமே ஆமாகில்
இக்காலம் இப்புவியில் இறப்பதுஏன் அம்மானை ;
இறவா திருக்கும் இடமறியார் அம்மானை. 84

இருளை இருள்விழுங்கி ஈரறிவும் ஓரறிவாய்ப்
பொருளை விழுங்கும் பொருளறியார் அம்மானை ;
பொருளை விழுங்கும் பொருளறிவார் ஆமாகில்
இருள்தனக் குள்ளே இருப்பதுஎன் அம்மானை ;
இருளு மதைநீக்கி[1] இருந்தனர்காண் அம்மானை. 85

* நாரா யணன்அறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் அம்மானை ;
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் ஆமாகில்
ஆராயுங் காலெடுப்பது ஐயமன்றோ அம்மானை ;
அன்னமறி யார்எடுப்பது ஐயமோ அம்மானை. 86

வெண்ணீறு இடுவார் விழுவார் விதவிதமாய்
வெண்ணீறு பூத்த விதமறியார் அம்மானை ;

---

83. உரு - உடல். தயங்குதல் - மயங்குதல். நிறம் - தன்மை.

84. முக்காலம் - மூன்றுபொழுது. இறவாதிருக்கும்இடம் - முத்திநிலை.

85. ஈரறிவு - பரஞானம், அபரஞானம் ; இயற்கை, செயற்கை அறிவுமாம். இருள் - அஞ்ஞானம். பொருளை - அசத்தை. பொருள் - இங்கு சத்து.

86. அருணேசர் - அண்ணாமலையார். வார் - நீட்சி. சிலை - வில். கலை - ஆடை. மெய் - உடல். மாதங்கம் - சிறந்த தங்கமலை, மேருமலை. மாதங்கம் - யானை, இங்கு யானைத்தோல். மாது+அங்கம் - உமையவள் உடல், அர்த்த நாரீசுரர். ஐயம் - பிச்சை. அன்னமறியார் - அன்ன உருவம் பெற்ற பிரமனால் தேடி அறியப் பெறாதவர்.

87. வெண்ணீறு - திருநீறு. விழுதல் - பணிந்து விழுதல்.

பா - ம் 1. மதை நீந்தி.

* இச்செய்யுள் திருவருணைக் கலம்பகபத்தில் உள்ளது.

வெண்ணீறு பூத்த விதமறியார் ஆமாகில்
மண்ணீறு இருக்கும் வகையறியார் அம்மானை ;
வகையறியா வாசியல்லோ மயங்குவதும் அம்மானை. 87

தந்தைக்கு முன்பிறந்து தகப்பனுக்குப் போதகத்தை
அந்தமுதல் தான்கடந்தே அறிவித்தார் அம்மானை ;
அந்தமுதல் தான்கடந்தே அறிவித்தார் ஆமாகில்
தந்தையிட மாகவல்லோ தாமிருந்தார் அம்மானை ;
தாமிருந்தும் அப்பொருளைத் தாமறியார் அம்மானை. 88

பிறந்த உடலைவிட்டுப் புறம்போன சீவனைத்தான்
உறங்குதென்று சொல்ல உறக்கமுண்டோ அம்மானை ;
உறங்குதென்று சொல்ல உறக்கமுண்டே ஆமாகில்
உறக்கமும் அற்றே ஓடுதுகாண் அம்மானை ;
ஓடுகின்ற சீவனுக்கே உணர்வறியார் அம்மானை. 89

கட்டாணி முத்துக் கயற்கண்ணி பங்கிலுறை
அட்டாலைச் சொக்கருக்கே ஆறுசிரசு அம்மானை ;
அட்டாலைச் சொக்கருக்கே ஆறுசிரசு ஆமாகில்
எட்டாத வெள்ளம் இழுக்குமோ அம்மானை ;
இழுக்கும் பெருகரையில் இருப்பவரை அம்மானை. 90

*தென்புலியூர் அம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன்று எந்நாளும் மேவுங்காண் அம்மானை ;
வெம்புலியொன்று எந்நாளும் மேவுமே ஆமாகில்
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை ;
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை. 91

---

**88.** முன்பிறந்து - நெற்றிக் கண்ணிற் பிறந்து. போதகம் - பிரணவப் பொருள் ; ஞானமுமாம். அந்தம்முதல் - இறுதியும் முதலும். அறிவித்தார் - அறிவித்தவராகிய முருகன் நான்காம் அடி சோமாஸ்கந்த மூர்த்தியாக விளங்குதலைக் குறிப்பதாகும்.

**89.** புறம்போன - புறம்பாகப்போன.

**90.** கட்டாணிமுத்து - உயரியமுத்து. பங்கு - இடப்பாகம். ஆறு சிரசு - தலையில் கங்கையாறு.

**91.** வெம் புலி - வியாக்கிரபாத முனிவர். அம்பலம் - பொன்னம்பலம். ஆட்டை - ஆட்டத்தை. வேங்கை - கையில் நெருப்பேந்திய இறைவன்.

* இச்செய்யுள் தில்லைக் கலம்பகத்துள் உள்ளது.

ஆயன்கிடை கிடக்க[1] அம்பலமு மாயிருக்க
மாயமாய் ஆடெடுத்த மகதேவர் அம்மானை ;
மாயமாய் ஆடெடுத்த மகதேவர் ஆமாகில்
ஆயனுஞ் சற்றே அறியாரோ அம்மானை ;
அறிந்தல்லோ நித்திரைக் கண்ணனர்காண்[2] அம்மானை. 92

குற்றமில்லாச் சங்கரனர் கோயினுக்குள் ளேயிருவர்
புற்றுமண்ணை ஈந்து பொருள்பறித்தார் அம்மானை ;
புற்றுமண்ணை ஈந்து பொருள்பறித்தார் ஆமாகில்
சற்றுமண் மீதில் தானிலையோ அம்மானை ;
இல்லையென்ற போக்கிசன் இல்லைகாண்[3] அம்மானை. 93

பொய்யுங் களவும் புலையும் தவிராதார்
பொய்யுங் களவும் புலைதவிர்த்தார் அம்மானை ;
பொய்யுங் களவும் புலைதவிர்த்தார் ஆமாகில்
மெய்யென் றெடுத்துத் துணை[4]மேவுவரோ அம்மானை ;
மேவுவரோ நின்றநிலை மேவினல் அம்மானை. 94

நேரஞ் சிறுக்கும் நிலையறிய மாட்டாதார்
பாரஞ் சிறுக்கும் பதியறியார் அம்மானை ;
பாரஞ் சிறுக்கும் பதியறியார் ஆமாகில்
வீரஞ் சிறுத்து விரைவுவரோ அம்மானை ;
விரைவார் அனுபூதி விதத்தினல்[5] அம்மானை. 95

*இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனர்
விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை ;

---

**92.** ஆயன் - திருமால். கிடைகிடக்க - படுத்துக்கிடக்க, மந்தையைப் பாதுகாத்துக்கிடக்க. அம்பலம் - சபை, வெளியிடம். ஆடு - ஆட்டம், ஆடு. நித்திரைக்கண் ஆனர் - அறிதுயில் கொள்பவர் ஆனர், தூக்கம் பொருந்திய கண்ணையுடையவர்.

**94.** புலை - புலையொழுக்கம். துணைமேவுதல் - துணைபுரிதல்.

**95.** நேரம் - வாழ்நாள். சிறுத்தல் - குறைதல். பாரம் - உடற்சுமை. அனுபூதிவிதம் - கைவந்த வகை.

**96.** இருவர் - திருமால், பிரமன். விருதுகட்டல் - வெற்றிகூறல். அங்கம் வெட்டி வென்றனர் - அங்கம் வெட்டிய திருவிளையாடலைக் காண்க. காயம் - உடல். இறைவன் உருவம் அற்றவன் என்பது பொருள்.

பா - ம் 1. ஆயன் கடைக்க. 2, கண்ணர்காண். 3. போக்கின் இல்லை காண். 4. றெடுத்துத் துணைவரும். 5. வீதத்தால்.

* இச்செய்யுள் மதுரைக் கலம்பகத்துள் உள்ளது.

விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே ஆமாகில்
அருமையுடம்பு ஒன்றிருகூ றுவதேன் அம்மானை ;
ஆனாலுங் காயமிலை ஐயரவர்க்கு அம்மானை. 96

ஆங்காரம் அச்சம் அகத்தறியா மூடர்கள்மெய்
நீங்கா திருக்கும் நிலையறியார் அம்மானை ;
நீங்கா திருக்கும் நிலையறியார் ஆமாகில்
போங்கால மான பொருளறியார் அம்மானை ;
**பொருளறியாப் பொய்க்குருவைப் போற்றுவதேன் அம்மானை. 97**

இடமறிந்து கொண்டே இருக்கறியாப் பேதையர்கள்
சடமறிந்து வாழத் தடமறியார் அம்மானை ;
சடமறிந்து வாழத் தடமறியார் ஆமாகில்
சடந்தனிலே சற்குருவைத் தாமறிவார் [1] அம்மானை ;
தாமறியாத் தலைவனையுந் தானறிவார் [2] அம்மானை. 98

சற்குருவின் ஆசனத்தில் சரியாக வேயிருந்து
தர்க்கமிடு மூடருக்குத் தவம்வருமோ அம்மானை ;
தர்க்கமிடு மூடருக்குத் தவம்வருமே ஆமாகில்
இப்புவியி லேநரகம் எய்துவதுஎன் அம்மானை ;
எழுநரகின் கீழே இருந்தனர்காண் அம்மானை. 99

அந்தப்பசும் பொற்கிரிவாழ் ஆதிசத்தி நாதரவர்
வந்தபுலித் தோலுரித்த வல்லாளர் அம்மானை ;
வந்தபுலித் தோலுரித்த வல்லாளர் ஆமாகில்
இந்த மலைமேல் இருப்பதுஎன் அம்மானை ;
இருந்தார் மலையன்மகள் இன்பத்தால் அம்மானை. 100

**மூவர் அம்மானை**

முற்றிற்று

---

**98.** இடம் - தலம், இடதுகலை. சடம் - உடலம், ஒரு வகை வாயு. தடம் - வழி. தாமறியாத் தலைவன் - தம்மால் அறிய இயலாத தலைவன்.

**99.** சற்குருவின்...... மூடர் - குருவின் நிலையை உருவத்தால் பெற்று உண்மையுணராதவர், போலியான தவத்தர். தர்க்கம் - வாதம். எழுநரகு - உண்டாகக்கூடிய நரகம்.

**100.** பொற்கிரி - பொன்மலை, மேருமலை. வந்த புலி - வெகுண்டு வந்த புலி. வல்லாளர் - வல்லமையுடையவர். மலையன்மகள் - இமவான் மகளான பார்வதி.

பா - ம் 1. தாமறியார். 2. தானறிந்தார்.

# வாழ்த்து

—oo—

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் :
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக ;
ஆழ்க தீயது ; எல்லாம்அரன் நாமமே
சூழ்க ; வையக மும் துயர் தீர்கவே.

— தேவாரம்

உ

செந்திலாண்டவன் துணை

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

**தமிழ்க் கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத் தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபி விருத்திக்காகவும் பொதுமக்களின் அனுகூலத்துக்காகவும் மன முவந்து அமைத்திருக்கும் பேறறக் கட்டளைகள்.**

| தொடர் எண் | தரும விவரம் | | மூலதனம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. | சிவஞான சித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் | ... | 15,000 |
| 2. | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த | ... | 11,500 |
| 3. | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு | ... | 5,000 |
| 4. | சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு, கொச்சி | ... | 5,000 |
| 5. | மூவர் தேவாரப் பரிசு ; சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை | ... | 10,000 |
| 6. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க | ... | 60,000 |
| 7. | அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க | ... | 30,000 |
| 8. | திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ | ... | 1,50,000 |
| 9. | இசைத் தமிழ்க் கல்விக்கு | ... | 1,00,000 |
| 10. | திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் | ... | 20,000 |
| 11. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமர பக்ஷம் திருதியை | ... | 10,000 |

| | | |
|---|---|---|
| 12. | இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் வைகாசிஅமரபக்ஷம் திருதியை ... | 10,000 |
| 13. | திருநள்ளாற்றில் ஆவணி மூல அன்னதானம் ... | 3,000 |
| 14. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... | 17,000 |
| 15. | திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ... | 1,00,000 |
| 16. | திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப் பெறுமானம் ... | 66,000 |
| 17. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... | 2,900 |
| 18. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... | 3,300 |
| 19. | கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... | 25,000 |
| 20. | தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... | 28,500 |
| 21. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவுநாள் அன்னதானம் வைகாசி அமரபக்ஷம் திருதியை | 9,000 |
| 22. | மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 23. | தருமை ஸ்ரீ குரு ஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... | 5,000 |
| 24. | சென்னை விவேகானந்தா கல்லூரியில் ராஜாஜி சைவசித்தாந்தக் கட்டளை ... | 10,000 |
| 25. | ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவசித்தாந்தக் கட்டளை ... | 20,000 |
| 26. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீ வைகுண்டம் ... | 5,000 |
| 27. | மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு ... | 10,000 |
| 28. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ... | 1,00,000 |
| 29. | ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ... | 5,000 |
| 30. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—ஸ்ரீகாசி மதுரை, குடந்தை மாணவிகட்கு ... | 1,50,000 |

| | | | |
|---|---|---|---|
| 31. | டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை | ... | 3,500 |
| 32. | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு | ... | 1,000 |
| 33. | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி | ... | 3,000 |
| 34. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை | ... | 10,000 |
| 35. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் | ... | 4,000 |
| 36. | விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி | ... | 1,000 |
| 37. | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு | ... | 3,500 |
| 38. | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு | ... | 3,500 |
| 39. | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தர்மம் | ... | 3,500 |
| 40. | ஸ்ரீ வைகுண்டத்தில் படிப்பக நிதி | ... | 3,500 |
| 41. | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி | ... | 35,000 |
| 42. | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் | ... | 12,000 |
| 43. | இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் | ... | 3,500 |
| 44. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நூல்நிலையக் கட்டிடம் | ... | 17,825 |
| 45. | பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை | ... | 5,000 |
| 46. | அரியநாயகிபுரத்தில் நூல்நிலைய நிதி | ... | 3,500 |
| 47. | ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அன்னதானம் நவராத்திரி, விஜயதசமி நாட்களில் | ... | 5,000 |
| 48. | ஸ்ரீவில்லிப்புத்தூரில் தேவாரப் பரிசு | ... | 3,500 |
| 49. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம் போட | ... | 7,500 |
| 50. | காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு | ... | 5,000 |

51. திருவஞ்சைக்களத்தில் ஆடிச்சுவாதியில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ... 7,000
52. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் உதவி நிதி ... 18,500
53. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம் ... 28,000
54. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் உதவி மூலதனம் ... 15,500
55. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ... 15,000
56. மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவசித்தாந்த உபந்நியாசக் கட்டளை ... 5,000
57. ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம்—சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ... 60,000
58. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நானக் கட்டம் நிறுவ ... 2,275
59. ஸ்ரீ வைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ... 45,000
60. ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ... 5,000
61. பனசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ... 5,000
62. (6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ... 16,000
63. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் மதுரை முதலாண்டு உதவி மூலதனம் ... 7,000
64. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் ... 14,000

| | | |
|---|---|---|
| 65. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரு-திருநெல்வேலி இரண்டாண்டு உதவி மூலதனம் ... | 10,000 |
| 66. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரு-கும்பகோணம் முதலாண்டு உதவி மூலதனம் ... | 7,000 |
| 67. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை... | 10,000 |
| 68. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... | 27,975 |
| 69. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... | 10,000 |
| 70. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ... | 8,000 |
| 71. | ஸ்ரீ காசியில் தை மாசத்தில் இந்தியக் குடியரசு தின அன்னதானம் ... | 1,000 |
| 72. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி... | 1,50,000 |
| 73. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப்பெறுமானம் ... | 50,000 |
| 74. | சண்டேசுவர நாயனார் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் திருவாய்ப்பாடி ... | 3,500 |
| 75. | காஞ்சீபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி ... | 7,000 |
| 76. | திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... | 5,000 |
| 77. | சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு திருக்குறள் பதிப்பு நிதி ... | 35,000 |

| | | |
|---|---|---|
| 78. | ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மங்கையர்க் கரசியார் நினைவுப் பரிசு நிதி ... | 3,500 |
| 79. | கும்பகோணம் தாலூகா மேலச் சூரியமூலை கண்டியன் பழவாற்றின்மீது பாலம் கட்ட ... | 7,470 |
| 80. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப் பந்தல் தரும நிதி ... | 3,500 |
| 81. | பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள் ... | 5,000 |
| 82. | திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில் ... | 7,000 |
| 83. | திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் நினைவு வாசகசாலை நிறுவ ... | 5,000 |
| 84. | திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... | 35,000 |
| 85. | இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன் மார்க்க சங்க நூல் நிலைய நிதி ... | 5,000 |
| 86. | லால்குடி ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... | 15,000 |
| 87. | அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி (திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசும்) ... | 5,000 |
| 88. | குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 89. | திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு சித்திரைச் சதயத்தில் ... | 15,000 |
| 90. | திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தமிழ்ப் பரிசு ... | 5,000 |
| 91. | ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ... | 3,500 |
| 92. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம், இராமேசுவரம் ... | 3,500 |

| | | |
|---|---|---|
| 93. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்ன தானம், சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 94. | காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்) ... | 5,000 |
| 95. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 96. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 97. | திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... | 5,600 |
| 98. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 99. | தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... | 5,000 |
| 100. | மணிக்குடியில் கடவூர்க்கலயர் புனற்பந்தர் நிதி | 3,500 |
| 101. | காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்னதானம் | 5,000 |
| 102. | திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 103. | ஸ்ரீ காசியில் பங்குனி மாசத்தில் கமலை ஞானப் பிரகாசர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 5,000 |
| 104. | திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ... | 5,000 |
| 105. | காசியில் சித்திரை மாசத்தில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 106. | ஆடுதுறையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி ... | 30,000 |
| 107. | செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி ... | 50,000 |
| 108. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி ... | 12,000 |
| 109. | ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு - திருச்செந்தூர் - ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில் ... | 7,000 |

110. ஸ்ரீ காசியில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு (கார்த்திகை மாசத்தில்) ... 7,00

111. சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசுநிதி ... 5,00

112. தஞ்சையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... 5,000

113. மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு ... 5,000

114. திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தரும நிதி தத்துவாஞ்சேரி ... 3,500

115. காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு ... 7,000

116. திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம்பாலிப்பு ... 5,0

117. ஸ்ரீ காசியில் சுந்தரர் ஆடிமாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... 7,00

118. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைப் பரிசு—அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் ... 1,0

119. சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு ... 5,0

120. வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு—திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் ... 3,5

121. காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்பு சேமவைப்பு ... 6,000

122. மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு ... 5,000

123. திருவாதவூரில் ஸ்ரீ மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி ... 5,000

124. சீகாழியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு பால் நிதி 3,500

---

திருச்சினப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 28 | நீதிநெறி விளக்கம் – ஆங்கிலம், ஹிந்தி ... | 0 | 8 |
| 29 | சகலகலா வல்லி மாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... ... | 0 | 1 |
| 30 | அபிராமி அந்தாதி – கி. வா. ஜ. குறிப்புரையுடன் கூடியது ... ... | (அச்சில்) | |
| 31 | சிவஞான சித்தியார் – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... ... | 5 | 0 |
| 32 | ஷை ஹிந்தி மட்டும் ... ... ... | 1 | 0 |
| 33 | திருக்குறள்–அறத்துப்பால்–ஹிந்தி மொழிபெயர்ப்பு | 1 | 8 |
| 34 | ஷை பொருட்பால் ஷை ஷை ... | 2 | 8 |
| 35 | ஷை காமத்துப்பால் ஷை ஷை ... | 1 | 0 |
| | ஷை மூன்று புத்தகங்களும் சேர்த்து ... | 4 | 0 |
| 36 | திருக்குறள்–கே. எம். வேங்கடராமையா. M.A., B.O.L. அவர்கள் – குறிப்புரையுடன் ... | 0 | 12 |
| 37 | முதுமொழிமேல் வைப்பு–ஸ்ரீவெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... ... | 0 | 7 |
| | திருவுசாத்தானக் கல்வெட்டுகள் ... ... | 0 | 6 |
| | கந்தர் கலி வெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், மீனாட்சியம்மை குறம் முதலியன ... | 2 | 12 |
| | திருவாரூர் நான்மணிமாலை – முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... | 1 | 4 |
| 1 | சிதம்பர மும்மணிக்கோவை–சிதம்பரச் செய்யுட் கோவை – தில்லைச் சிவகாமி யம்மை இரட்டைமணி மாலை ... | 1 | 0 |
| 2 | பண்டார மும்மணிக்கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை ... | 1 | 0 |
| 3 | தமிழிசைப் பாக்கள் ... | 0 | 8 |
| 4 | திருக்குறள்–பொருட்பால்–பரிமேலழகர் உரை– இலக்கணக் குறிப்பு விளக்கம் ... | 0 | 2 |

**கிடைக்குமிடங்கள் :**

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

---

**குறிப்பு :** ஷை விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' **பத்திரிகையைச் சாரும்.**

இந்நூல் கிடைக்குமிடம் :

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L. அவர்கள்

*நிரந்தரத்தலைவர்*

**குமரகுருபரன் சங்கம்**

**ஸ்ரீவைகுண்டம்**

**திருநெல்வேலி ஜில்லா.**

திருச்சினாப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.